தரம் 06

# தமிழ் மொழியும் இலக்கியமும்

அலகு 06

பறவைகள் பலவிதம்

MR.R.F.ROSHAN

NP/MN/MURUNKAN MAHA VIDYALAYAM

# பறவைகள் பலவிதம்
## (அறிமுகம்)

- "பறவைகள் பலவிதம்" என்பது ஓர் உரையாடற் பகுதியாகும்.
- இதனை எழுதியவர் கோகிலா மகேந்திரன் எனும் எழுத்தாளர் ஆவார்.
- இங்கு மாணவர்கள் சிலர் தமது ஓய்வு நேரத்தை பயன்மிக்கதாக்க நாடகம் ஒன்றை நடிப்பதற்குத் தயாராகின்றனர். அவ்வேளையிலே அங்கே வரும் அறிவண்ணன் என்பவர் அவர்களின் ஒப்பனைகளைக் கண்டு அவர்களோடு உரையாடும் பாங்கில் எழுதப்பட்டுள்ளது.

இவ் உரையாடலில் பங்குபற்றும் பாத்திரங்கள்

அறிவண்ணன்

தமிழ்நிலா

தேன்மொழி

அன்பரசன்

இளவழகன்

மாணவர்கள் ஏற்றுக்கொண்ட பறவைகளின் பாத்திரங்கள்

தமிழ்நிலா – காகம்

தேன்மொழி - கிளி

அன்பரசன் - வாத்து

இளவழகன் - மயில்

இவ்வுரையாடலின் போது பறவைகள் தொடர்பாக தமது சந்தேகங்களை அறிவண்ணனிடம் கேட்டு மாணவர்கள் விளக்கம் பெறுகின்றனர்.

பறவைகளுக்கு எத்தனை கால்கள்?

பறவைகளுக்குப் பல் இருக்கிறதா?

பறக்காத பறவைகள் எவை?

பறவைகளில் பெரியது எது?

நீண்ட தூரம் பறக்கும் பறவை?

அந்தாட்டிக்காவில் நீர் வாழ்வுக்குச் சிறத்தலடைந்த பறவை?

பறவைகளில் அழகானது எது?

போன்ற விடயங்கள் உரையாடப்பட்டுள்ளன.

# பறவைகளுக்கு எத்தனை கால்கள்?

- இது இவ்வுரையாடலின் முதலாவது விடயத்தொடர்புடைய வினாவாகும். இச் சம்பாசனை அறிவண்ணனால் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

- மாணவர்கள் இதற்குப் பதில் கூறுகின்றனர்.

- அன்பரசன் - "இதென்ன? பால்குடிப்பிள்ளையைக் கேட்கும் கேள்வி! இரண்டுகால் தானே?"

- இளவழகன் - "இல்லை நாலு கால்"

- அறிவண்ணன் - "...பறவைகள் பறத்தலுக்காகச் சிறப்படைந்த ஊர்வன. அவற்றின் முன்னங் கால்களே இறக்கைகளாக மாறியுள்ளன. ஆகவே அவற்றுக்கு நாலு கால் என்று இளவழகன் சொன்னது அர்த்தமுள்ள பதில்தான்."

# பறவைகளுக்குப் பல் இருக்கிறதா?

தமிழ்நிலா தேன்மொழியின் காதில் ஏதோ இரகசியம் சொல்லுகிறாள்.

- இதைக்கண்ட அறிவண்ணன் தேன்மொழியிடம் விசாரிக்கிறார்.
- "கிளிக்குப் பல் இல்லையாம். நடிக்கும் போது பல்லைக் காட்டிச் சிரிக்காம நடிக்கட்டாம்"
- "பறவைகளுக்குப் பொதுவாகப் பல் இல்லை என்பது உண்மைதான். ஆதியில் சில பறவைகளுக்குப் பல் இருந்திருக்கிறது. அவற்றில் முக்கியமானது ஆக்கியொப்ரறிக்ஸ்."

## பறக்காத பறவைகள் எவை?

“பறக்காத பறவைகளும் இருக்கின்றனவா அண்ணா?” எனத் தமிழ்நிலா கேட்டபோது

அறிவண்ணன் - “இருக்கின்றனவே ஆபிரிக்காவின் தீக்கோழி, தென் அமெரிக்காவின் எமு, அவுஸ்திரேலியாவின் கசோவரி, நியூசிலாந்தின் கிவி ஆகியன பறப்பதில்லை.” என்கின்றார்.

## பறவைகளில் பெரியது எது?

“பறவைகளில் பெரியது எது?” என அன்பரசன் கேட்டபோது

அறிவண்ணன் - “மடகஸ்காரில் வாழ்ந்த மோவாஸ் எனப்படும் யானைப் பறவைதான் மிகப்பெரியது.” என்கின்றார்.

# அந்தாட்டிக்காவில் நீர் வாழ்வுக்குச் சிறத்தலடைந்த பறவை?

அந்தாட்டிக்காவில் நீர் வாழ்வுக்குச் சிறத்தலடைந்த பறவை பென்குவின். அதன் முன்னங்கால்கள் துடுப்புகளாக மாறி நீந்த உதவுகின்றன.

# நீண்ட தூரம் பறக்கும் பறவை?

ஆட்டுக்ரேண் என்ற பறவை பாதகமான காலநிலையில் ஆட்டிக் வட்டத்திலிருந்து ஐரோப்பா, ஆபிரிக்காவின் கரையோரம் வழியே சுமார் 25000 மைல்களைக் கடந்து தென் அத்திலாந்திக் பிரதேசங்களுக்குக் குடிபெயருகின்றது.

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. நால்வரும் நாலு பறவை மாதிரி அசைகிறார்கள். இதில் “பறவை” என்பதன் ஒத்த சொல்

அ. விலங்கு

ஆ. பட்சி

இ. கால்நடை

ஈ. ஊர்வன

02. மெத்த மகிழ்ச்சி. இங்கு மகிழ்ச்சி என்பதன் எதிர்ப்பதம்.

அ. குதூகலம்

ஆ. சந்தோசம்

இ. இன்பம்

ஈ. துக்கம்

03. பறவைகளின் கால்கள் எத்தனை என இளவழகன் கூறியுள்ளார்?

அ. இரண்டு

ஆ. மூன்று

இ. நான்கு

ஈ. ஆறு

04. பல்லுள்ள பறவையாகச் சுட்டப்படுவது எது?

அ. ஆந்தை

ஆ. கிளி

இ. ஆக்கியொப்ரெறிக்ஸ்

ஈ. மைனா

05. பறவைகளில் மிகப்பெரிய பறவையாகக் குறிப்பிடப்படுவது எது?

அ. மோவாஸ்

ஆ. கழுகு

இ. பருந்து

ஈ. கோழி

06. “அண்ணா திடீரென ஞானியாகிவிட்டார்” இங்கு ஞானி என்பது

அ. முற்றும் துறந்தவன்

ஆ. அறிவிலி

இ. விஞ்ஞானி

ஈ. அஞ்ஞானி

07. முதன் முதலில் பார்க்கும் ஒத்திகை எவ்வாறு அழைக்கப்படும்?

அ. வெள்ளோட்டம்

ஆ. ஒத்திகை

இ. வெள்ளுடுப்பு

ஈ. அரங்கேற்றம்

08. கடவுள் நம்பிக்கை உள்ளவன் எவ்வாறு அழைக்கப்படுவான்.

அ. நாத்திகன்

ஆ. பேதை

இ. ஆத்திகன்

ஈ. அறிஞன்

09. கதிரையிலிருந்து நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர் யார்?

அ. தமிழ்நிலா

ஆ. அன்பரசன்

இ. தேன்மொழி

ஈ. அறிவண்ணன்

10. இந்நாடகத்தின் நெறியாளர் யார்?

அ. கோகிலா மகேந்திரன்

ஆ. இளவழகன்

இ. அன்பரசன்

ஈ. தமிழ்நிலா

## சரியாயின் சரி (√) எனவும் பிழையாயின் பிழை (X) எனவும் அடையாளமிடுக.

1. பறவைகளுக்குப் பொதுவாகப் பல் உண்டு ( X)

02. பறவைகளிலே மிகச் சிறியது மோவாஸ் எனப்படும் பறவைகள். ( X )

03. இந்நாடகத்தின் பிரதான நடிகர் அறிவண்ணன். ( X )

04. நீரில் வாழும் பறவைகளில் ஒன்று பென்குவின் ( √ )

05. கடவுளை மறுப்பவன் ஆத்திகன். ( X )

06. கிவி என்பது பறக்கும் பறவையாகும்.

( X )

07. கசோவரி என்பது அவுஸ்ரேலியாவின் பறவை.

( √ )

08. பறவைகளில் பெண்ணே அழகானது.

( X )

09. இறைவனின் படைப்பில் எல்லாமே அழகானவை.

( √ )

10. பறவைகளுக்கு சுயநலம் உண்டு.

( X )

# தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| தமிழ்நிலா | வாத்து |
| அறிவண்ணன் | மயில் |
| தேன்மொழி | காகம் |
| அன்பரசன் | பார்வையாளன் |
| இளவழகன் | கிளி |

# தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| பிரபஞ்சம் | முற்றும் துறந்தவர் |
| சந்தோசம் | பறவை |
| பட்சி | உலகம் |
| ஆதி | மகிழ்ச்சி |
| ஞானி | தொடக்கம் |

# பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

01. நாடகப் பாத்திரங்களாகப் பயன்படும் பறவைகள் எவை?

வாத்து, மயில், காகம், கிளி

02. இவ் உரையாடலின் ஆசிரியர் யார்?

கோகிலா மகேந்திரன்

03. ஓய்வு நேரத்தை மாணவர்கள் எவ்வாறு பயனுள்ளதாக்கினர்?

நாடகம் ஒன்றை தயாரித்து நடித்தனர்.

04. பறவைகளுக்கு நாலு கால் எனக் கூறக் காரணம் என்ன?

பறவைகள் பறத்தலுக்காகச் சிறப்படைந்த ஊர்வன. அவற்றின் முன்னங் கால்களே இறக்கைகளாக மாறியுள்ளன.

05. பறக்காத பறவைகளும் எவை?

ஆபிரிக்காவின் தீக்கோழி

தென் அமெரிக்காவின் எமு

அவுஸ்திரேலியாவின் கசோவரி

நியூசிலாந்தின் கிவி

06. பறவைகளில் பெரியது எது?

மடகஸ்காரில் வாழ்ந்த மோவாஸ் எனப்படும் யானைப் பறவைதான் மிகப் பெரியது.

07. நீண்ட தூரம் பறக்கும் பறவை எது?

ஆட்டுக்ரேண்

08. பார்ப்பவரின் கண்களுக்கு ஏற்ப அழகு எவ்வாறு வேறுபடுகின்றது?

அவரவர் மனவிசாலத்துக்கு ஏற்ப, அறிவு விருத்திக்கு ஏற்ப வேறுபடும்.

09. இந்நாடகத்தின் நெறியாளரும், பிரதான நடிகரும் யார்? அவர் ஏற்ற பாத்திரம் என்ன?

இளவழகன், மயில்

10. பறவைகளின் சிறந்த பண்புகளாக எவற்றை அறிவண்ணன் கூறுகிறார்?

பறவைகளுக்குச் சுயநலம் இல்லை.

ஆதிக்க வெறி இல்லை.

பேராசை இல்லை.

நயவஞ்சகம் இல்லை.

மற்றவனை நசுக்க வேண்டும் என்ற சிந்தனை இல்லை.

மகிழ்வாகப் பாடித் திரிகின்றன.

# நன்றி